**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 1, 2, 4 முதல் 10 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.510/2022

வா.சா.1 பெரியசாமி த/பெ பொங்கியண்ணன்

**1,2, 4 முதல் 9 பிரதிவாதிகள்தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–**

1. அறக்கட்டளையை கோவில் சார்ந்து தான் நடத்தி வருகிறோமா என்றால் கோயில் சார்ந்தும் மற்ற பொதுகாரியங்களுக்கும் சேர்த்து அறக்கட்டளை நடத்தி வருகிறோம். மற்ற பொதுகாரியங்கள் என்பது என்னவொன்றால் இயற்கை பேரிடர், கல்வி நன்கொடை, மருத்துவ உதவி போன்றவற்றிக்காக செய்து வருகிறோம்.

2. மேற்படி காரரியங்களுக்கு உதவி செய்ததற்க்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் சிலவற்றிக்கு ஆவணம் இருக்கிறது, சிலவற்றிக்கு ஆவணங்கள் இல்லை, தேவைப்பட்டால் ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். அறக்கட்டளை மூலமாக வைப்பு நிதி எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.5,00,000/– வைப்புநிதியாக உள்ளது. ரூ.5,00,000/– எந்த வங்கியில் வைப்பிடா உள்ளது என்றால் சிட்டியூனியன் வங்கி, திண்டல் கிளை, ஈரோடு.

3. பொதுமக்களிடம் இருந்து அறக்கட்டளைக்கு பணம் யாரும் தருகிறார்களா என்றால் இல்லை. கோயில்க்கு வரும் நிதியை என்ன செய்வீர்கள் என்றால் எங்களது அறக்கட்டளைக்கு வராது இந்து சமய அறநிலைய துறைக்கு தான் செல்லும். அறக்கட்டளை நிறுவனத்தை இந்த சமய அறநிலையத்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை ஆனால் சார்பதிவளார் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. கோயில் வரவு, செலவு கணக்குகளை அறநிலைத்துறை தான் பராமரித்துவருவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது கும்பாபிசேகத்திற்க்கு அறக்கட்டளை மூலம் வரும் வருவாய் மூலமாக தான் நடத்தினீர்கள் என்றால் எப்படி யாரிடம் அனுமதி பெற்று நடத்தினீர்கள்

என்றால் இந்த அறநிலைதுறையில் அனுமதி வாங்கி நடத்தினோம். அப்படி அனுமதி பெற்று நடத்தினத்திற்க்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் என்னிடம் நகல் தான் உள்ளது அதற்க்குரிய அசல் இந்து அறநிலைத்துறையிடம் தான் உள்ளது.

5. எவ்வளவு கோயில் கும்பாபிசேகத்திற்க்கு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. கும்பாபிசேகம் நடத்தியதிற்க்கு செலவு கணக்கு இந்து அறநிலையத்துறையிடம் காட்டப்பட்டதா என்றால் அவர்கள் கேட்கவில்லை. கோயிலுக்கு வரும்நிதியை அறக்கட்டளை பெயரில் கும்பாபிசேகம் நடத்தி பொதுமக்களிடம் வந்த நிதியை அறக்கட்டளையில் உறுப்பினர்கள் சொந்த பயன்பாட்டிற்க்கு எடுத்துகொண்டார்கள் என்றால் சரியல்ல.

6. இதற்க்கு முன்பு 2,3 கோவில்களுக்கு கும்பாபிசேகம் நடத்தியுள்ளோம். கோயில்க்காக செலவு செய்த தொகையை ரொக்கமாக கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது. அறக்கட்டளையில் உள்ள தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரின் பங்குகள் என்னவென்று தெரியுமா என்றால் தலைவர் என்ன சொல்கிறார்ரோ அதன் படி நிர்வாகம் செய்வோம். அறக்கட்டளையில் நான் செயலாளராக இருந்து என்னவெல்லாம் பணி செய்ய இயலும் என்றால் நான் மேற்பார்வை பார்ப்பேன். வரவு, செலவு கணக்குகளை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வரவு, செலவு கணக்குகள் தலைவருக்காவது தெரியுமா என்றால் வரவு, செலவு கணக்குகளுக்கு வேலையே கிடையாது.

7. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு பணி அனைவரும் பங்கு கொண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டது. அறக்கட்டளையின் நன்கொடையார்கள் பெயர்களை குறிப்பிட்டு இந்து அறநிலையத்துறைக்கு கொடுக்கப்பட்டு உத்தரவு பெறப்பட்டது. அறநிலையத்துறையில் அப்படி எதுவும் அனுமதி பெறவில்லை, உறுப்பினர்கள் நன்கொடை எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. உறுப்பினர்கள் அனைரும் கோயில் பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற என்னத்தில் தான் கோயிலுக்கு செலவழித்த எந்தவொரு செலவுக்குரிய ஆவணங்களும் வைத்து பராமரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கோயில் பணத்தை ஏமாற்றியதன் காரணமாகதான் இந்த வழக்கின் பிரதிவாதிகள் அணைவரும் செய்திதாளில் அறக்கட்டளை பணமோசடி செய்ததாக பிரசுரம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9. அவ்வாறு செய்திதாளில் அறக்கட்டளையில் தவறுகள் வெளிவந்ததால் தான் பொதுமக்களுக்கு தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் தான் பிரதிவாதிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.